விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கிழமை: 27 ஷவ்வால் பிறை: 14 இதழ்: 87

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-05-1990

சங்கராச்சாரியார் சுவாமிகளும் சீடர்களும் விடுதலை!

[அயோத்தி]

அயோத்தி நகரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளும், அவரது ஏழு சீடர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சுவாமிகள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து ஆயிரக்கணக்கான இந்துக்கள், கட்ந்த சில நாட்களாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது தெரிந்ததே. (து)

யாழ். மாவட்ட சுகாதார சேவைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

"கிளிநொச்சியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக 10½ லட்சம் ரூபா நிதி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு-

(8-ம் பக்கம் பார்க்க)

அரசு - புலிகளுக்கிடையில் ரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை!

ஒப்பந்தம் ஏற்படும் பட்சத்தில் மக்கள் கருத்து அறியப்படும்

'ஈழநாடு'வுக்கு 'யோகி' அளித்த பிரத்தியேக பேட்டி

(நமது நிருபர் எஸ். சுந்தரலிங்கம்)

"இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ரகசிய ஒப்பந்தங்கள் எதுவுமில்லை. ஒப்பந்தங்கள் ஏதும் ஏற்படும் பட்சத்தில் அதற்கு முன் அவை பற்றி மக்கள் முன் பகிரங்கப் படுத்தப்படும். இதுபற்றி மக்களின் பூரண கருத்துக்களும் அறியப்படும்."

இவ்வாறு 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' செயலாளர் திரு. யோகரட்ணம் 'யோகி' 'ஈழநாடு' வுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் தெரிவித்தார்:

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் எதிர்க்கட்சியினருக்குத் தெரியவேண்டும்

(8ம் பக்கம் பார்க்க)

316 அடகு நகைகள் உரியவர்களால் மீளப்பெறவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் வங்கிப் பிராந்தியத் தலைமையகத்தினால் மீளளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட அடகு நகைகளில், 316 நகைகள் உரிமையாளர்களினால்

(8-ம் பக்கம் பார்க்க)

தமிழீழ இணக்கமன்று குறித்து விடுதலைப்புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"மக்கள் தம் பிணக்குகளை தமது ஊர்ப் பெரியவர்களுடன் கலந்துரையாடிச் சமாதான வழியில் தீர்த்து வைக்கும் முகமாக இணக்க மன்றுகள் எமது நேரடிக் கண்காணிப்பில் இயங்கிச் சிறப்பாக நடைபெறும் வகையில் புதிய அமைப்பு வகைகளை உருவாக்கி "தமிழீழ இணக்க

(8-ம் பக்கம் பார்க்க)

சுவிஸிலிருந்து இரு வடபகுதி இளைஞர்கள் நாடு கடத்தப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

சுவிஸர்லாந்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்திருந்த இருவடபகுதி இளைஞர்கள் கடந்த வாரம் நாடுகடத்தப் பட்டனர்.

முன்னறிவித்தல் எதுவுமின்றி இவர்கள் இருப்பிடங்கள் திடீரெனப் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டுவிலைச் சேர்ந்த ந. சத்தியசீலன், சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ். குமார் ஆகிய இரு இளைஞர்களுமே இவ்வாறு நாடுகடத்தப் பட்டவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பாக

(8-ம் பக்கம் பார்க்க)

சாம். தம்பிமுத்துவின் பூதவுடலுக்கு ஜனதிபதி நேற்று இறுதி மரியாதை

(கொழும்பு)

காலம் சென்ற சாம் தம்பிமுத்துவின் பூதவுடலுக்கு ஜனதிபதி திரு ஆர். பிரேமதாசா நேற்று இறுதி மரியாதை செலுத்தினர்.

கொழும்பிலுள்ளசிராவஸ்தியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த சாம் தம்பிமுத்துவின் பூதவுடல் நேற்று முன்தினம் அவரது (17 வயது) மகனிடம் ஒப்படைக்கப் பட்டது.

ஜனதிபதியுடன் பாராளுமன்ற சபாநாயகர் ஜனஎம். எச். மொகமட், பெருந்தோட்டத்தொழில் துறை

(8-ம் பக்கம் பார்க்க)

சாம் கொலை குறித்து ஜனதிபதி அதிர்ச்சி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்து கொடூரமான முறையில் கொலைப்பட்ட சம்பவத்தையிட்டு தாம் அதிர்ச்சியும், துயரமும் அடைந்ததாக ஜனதிபதி ஆர். பிரேமதாசா தனது

(8-ம் பக்கம் பார்க்க)

ரயில்மோதி மரணம் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

ரயிலில் மோதுண்டு மரணமான இனந்தெரியாத ஒருவரின சடலம், நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7-15 மணியளவில் கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த யாழ் தேவி ரயில், கச்சேரி-நல்லூர் வீதி ரயில்வேக் கடவையில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென ஒருவர் குறுக்கே பாய்ந்து மோதுண்டு மரணமானதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சுமார் ஐந்தரை அடி உயரமும், கறுத்த திடகாத்திரமான உடலமைப்பும், அடர்த்தியான தலைமயிரும் கொண்ட சுமார் 40 வயது மதிக்கத்தக்க இவர், நீலக் கோடிட்ட சேட்டும், நீலக் கோடிட்ட சாரமும் அணிந்து காணப்பட்டார்,

சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. [56]

யாழ். ஆஸ்பத்திரி பதிவுக் காரியாலயத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறமுடியாத நிலைமை!

பெற்றோர் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர மேற்குப் பகுதி பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலயத்தில், பிறந்த குழந்தைகளுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளமுடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் அமைந்திருக்கும் பிறப்பு இறப்புப் பதிவுக் காரியாலயக் கிளையில், யாழ். ஆஸ்பத்திரியில் குழந்தை பெற்ற வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், உள்ளூரைச் சேர்ந்தவர்களுமாகத் தினமும் 100க்கும் அதிகமான பெற்றோர், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கென வந்து, அவை கிடைக்காமல் திரும்பத்திரும்பப் போடப்பட்ட தகதிகளுடன் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் நேற்று 8 பேர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ், குடா நாட்டில் பரவலாகத் தினமும் இடம் பெற்றுவரும் மோட்டார் சைக்கிள் விபத்துகளில் நேற்றும் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் ஆறு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி-3797)

நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

வாக்காளர் இடாப்பில்

பெயர்கள் இடம்பெறாதவர்கள்

யாழ். தேர்தல் நிலையத்தில் பதிவுசெய்யலாம்

(யாழ்ப்பாணம்)

வாக்காளர் இடாப்பில் தமது பெயர்கள் பதிவு செய்யப்படாது விடுபட்டவர்கள் தங்கள் பெயர்களைத் தவறவிடாது யாழ் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தேர்தல் திணைக்களம் பொது மக்களைக் கோரியுள்ளது.

யாழ். தேர்தல் திணைக்களம் கடைசியாக 1987-ம் ஆண்டிலேயே வாக்காளர் பதிவை மேற்கொண்டது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் தேர்தல் திணைக்களம் இயங்காமையினால் 1988, 1989-ம் ஆண்டுகளில் வாக்காளர் பதிவு வேலைகள் முற்றாகநடைபெறவில்லை.

இவ்வாண்டு ஜூன் மாதத்திலிருந்து புதிதாக வாக்காளர் இடாப்புப் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான பதிவுப் பத்திரங்கள் யாழ். தேர்தல் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. (54)

நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜோசப் பாலாவின் 'திருப்பம்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இம் மாதம் 12ம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் கவிஞர் யாழ் ஜெயம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. கலாநிதி சவரிமுத்து அடிகள் செங்கை ஆழியான் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

'ராகிங்'கில் ஈடுபடும் மாணவர்களை

கைதுசெய்ய உத்தரவு!

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் 'இம்சிக்கும்' (ராகிங்) நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும், இவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்றும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வேண்டத் தகாத நடவடிக்கையைத் தடுப்பது சகல துணை வேந்தர்களதும் கடமையும், பொறுப்பும் ஆகும் என்றும், சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவர பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

வீதி விபத்தில் 6 பேர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் தினம் தினம் அதிகரித்துவரும் வீதி விபத்துகளில் நேற்று முன் தினம் ஆறுபேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஈவினையில் இடம்பெற்ற லொறி விபத்தில் நவாலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா [வயது 30] என்பவர் படுகாயமடைந்தார்.

மந்திகையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் துன்னாலையைச் சேர்ந்த சுசீலா முருகுப்பிள்ளை [வயது 30] என்ற இளம்பெண் படுகாயமடைந்தார்

கலிகைச்சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்வான் விபத்தில் துன்னாலையைச் சேர்ந்த கந்தசாமி சரவணபவன் [வயது 20] என்பவர் படுகாயமடைந்தார். மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளானது.

பளையில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணம் புதியசோனக தெருவைச்சேர்ந்த தையூப் சகாம்தீன் [வயது 20] என்பவர் படுகாயமடைந்தார்.

விசுவமடுவில் இடம்பெற்ற வண்டில் விபத்தொன்றில் அவ்விடத்தைச் சேர்ந்த இராமநாதன் நாகமுத்து [வயது 65] என்பவர்படுகாயமடைந்தார்.

மாங்குளத்தில் இடம்பெற்ற டிராக்டர் விபத்தில் பனிக்கங்குளத்தைச் சேர்ந்த சிவராசா பிரபாகரன் [வயது 10] எனும் சிறுவன் படுகாயமடைந்தான். (56)

யாழ்ப்பாணக் கல்லூரி

வகுப்புக்கள் 15-5-90 பி. ப. 3.30 மணிக்கு TOEFL புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகும். முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்க. கட்டணம் மூன்று மாதம் ரூபா 400/-

எஸ். ஜெப்நேசன்
அதிபர்.

(எ 735)

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்(வரைவுள்ளது)
சுன்னாகம்.

அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்கான கேள்வி

எம்மால் சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகாமையில் நடாத்தப்படும் அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

வேலை விபரங்களையும், கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களையும் வேலை நாட்களில் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 25 - 05 - 90.

பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம். 07-05-90. (எ 734)

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1952-6-14
உதிர்வு:
1989-4-23
திதி: 1990-5-10

அமரர் சின்னையா [ராஜா]
(S. A. S. லொறிச் சாரதி)

உதயக்கதிரவனின் ஒளியேந்தும் எம்தலைவா. இதயக் கோவிலிலே எழுந்தருளிய தெய்வமே, இடம் மாறி நீர் பரலோகம் சென்றாலும் காப்பேன் உம் செல்வங்களை தடம் மாறி போகேன் நானே.

எங்கள் ஒளிவிளக்காய் அன்புமொழி பலபேசி எங்களை நல்வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே நீர் அவனடி சென்று ஓராண்டு ஆனாலும் ஆறுமோ எமதுள்ளம் எத்தனை ஆண்டு கடந்தாலும் ஆறாது எமதுள்ளம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்—உமது பிரிவால் வாடும்.

அன்பு மனைவி பிள்ளைகள்
உற்றார் உறவினர், நண்பர்கள்.

155ம் கட்டை, விவேகானந்த நகர்,
கிளிநொச்சி. (சி 3833)

"சிரித்திரன் சித்திரக் கொத்து" இன்று நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'சிரித்திரன்' ஆசிரியர் திரு. எஸ். சிவஞானசுந்தரத்தின் (சுந்தர்) "சிரித்திரன் சித்திரக் கொத்து" நூல் வெளியீட்டு விழா இன்று 10-ம் திகதி மாலை நல்லை ஆதீனத்தில் திரு. மு. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற விருக்கிறது.

நல்லை ஆதீன குருமஹாசந்நிதானம், அருட் திரு. ஜெராட் சவிரிமுத்து, யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் ஆகியோர்கள் இவ் விழாவில் வாழ்த்துரைகள் வழங்குவார்கள். பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி), கலாநிதி நா. சுப்பிரமணியன், செங்கை ஆழியான், திரு. க. உமாமகேஸ்வரன், திரு. பொன். பூலோகசிங்கம், திக்கவயல் சி. தர்மகுலசிங்கம், சிந்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை, திரு. எஸ். சந்திரபோஸ், அகளங்கன் ஆகியோர் விழாவில் கருத்துரைகள் வழங்குவார்கள். நூலாசிரியர் திரு. சி. சிவஞானசுந்தரம் பதிலுரை வழங்குவார். யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. இ. முத்துத் தம்பி முதற் பிரதியைப் பெறுவார். (153)

தலைமன்னார் - இராமேஸ்வரம்

கப்பல் சேவை: இந்திய தரப்பில் முடிவில்லை

(கொழும்பு)

இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பது சம்பந்தமாக இந்திய அரசு இன்னும் முடிவெதுவும் எடுக்கவில்லையென்று இந்தியப் பிரதித் தூதுவர் திரு. பி. ராத் தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழியினரை தாயகம் திருப்பி அனுப்புவதற்கு வசதியாக இக் கப்பல் சேவையை விரைவில் ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசு, இந்திய அரசுடன் உத்தியோக பூர்வமாக தொடர்பு கொண்டுள்ளது என்றும் திரு. ராத் கூறினார்.

நீதிமன்ற வளவு மினி பஸ் நிலையமாகிறது

(மட்டுவில்)

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற வளவு இப்பொழுது சாவகச்சேரி மினிபஸ் நிலையமாக மாறியுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்ற வளவு நீண்ட காலமாகப் பற்றை, செடி முளைத்துக் காடாகக் காட்சியளித்து வந்தது. இப்பகுதி இப்பொழுது சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (82)

ஊழியர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நடவடிக்கை

[கொழும்பு]

அரசாங்க கைத்தொழில் துறையின்கீழ் கடமையாற்றும் சகல ஊழியர்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக விசேட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நாடு முழுவதிலுமுள்ள 279 உதவி அரசாங்க பிரிவுகளினதும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த விருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

இதற்கென ஒவ்வொரு அரசாங்கஅதிபர் பிரிவிலும் உதவி அரசாங்க அதிபர்களையும். கிராம சேவையாளர்களையும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேரில் சந்தித்து உரையாற்ற விருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார். (அ

கிராம ரீதியாக மூலவள ஆய்வு

(பண்டத்தரிப்பு)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் சுற்று நிருபத்திற்கிணங்க சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூலவள ஆய்வு, தற்போது கிராம ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பிரிவிலுள்ள இயற்கை மூலவளங்கள் மற்றும் விவசாயம். கடற்றொழில், கைத்தொழில், கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளிலும் இந்த மூலவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுநல நிறுவனங்களுக்கு ஊடாக இந்த ஆய்வு துரிதகதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சிவசம்பு தெரிவித்தார். (72)

மணிவாக்கு

நாடிப்பெறும் அன்பு நல்லது; நாடாமல் அளிக்கப்பெறும் அன்பு மிக நல்லது.

— ஆன்றோர் வாக்கு.

நமது நோக்கு

ஆளணித்தொகை வளராதது ஏன்?

திணைக்களங்களிலும், உப அலுவலகங்களிலும் வேலைப்பளுவிற்கு ஏற்ப எத்தனை ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதைக் காலத்திற்குக் காலம் ஆராய்ந்து ஆளணித்தொகை (Cadre) தீர்மானிக்கப்படுகின்றது.

பொதுமக்களுக்குரிய சேவைகள் பாதிக்கப்படாமலிருப்பதற்கு ஒவ்வொரு திணைக்களத்திலும் உரிய ஆளணித்தொகையினர் கடமை புரிய வேண்டியது அவசியம்.

சில பகுதிகளில் மேலதிக ஊழியர்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்ட வேலைகளில் எல்லாம், அவர்களைப் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு மாற்றும் நடவடிக்கைகள் தாமதமடைவதுண்டு.

பற்றாக்குறையுள்ள பகுதிகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பது விரும்பத்தக்கது அல்ல;

இதைவிட, சனத்தொகைப் பெருக்கம், வேலைப் பளு அதிகரித்தல் போன்ற காரணங்களால் ஆளணித்தொகை உரியகாலத்தில் எல்லாப் பகுதிகளிலும் தீர்மானிக்கப்படுகின்றதா?

இத்தொகை அதிகரிப்பு சில பகுதிகளில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக, யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் ஆளணித்தொகை வளரவில்லை.

1958ஆம் ஆண்டு திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளே இன்றும் வடபகுதிக் கல்வித் திணைக்களத்திற் காணப்படுகின்றன என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

சென்ற 32 ஆண்டுகளில் மாணாக்கர் தொகை அதிகரிக்கவில்லையா? பாடசாலைகள் தொகை அதிகரிக்கவில்லையா? ஆசிரியர்கள் தொகை அதிகரிக்கவில்லையா? பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் நிர்வாக இயந்திரம் சீராக இயங்க ஆளணித் தொகை அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டாமோ?

பாடசாலைகளின் நிர்வாகம், ஆசிரியர்கள் கொடுப்பனவுகள் போன்ற பல வேலைகளில் தாமதங்கள் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சிலரது ஓய்வூதியம் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை என்றும் குறை கூறப்படுவதுண்டு.

சம்பள நிலுவைகள், சம்பள ஏற்றங்கள் போன்ற அன்றாட அலுவல்கள் எக்காரணம் கொண்டும் தாமதமடையக் கூடாது.

உரிய ஆளணித்தொகை உடன் கணக்கிடப்பட வேண்டும்; திறைசேரி அனுமதி பெறப்பட்டு, உரிய தொகையினர் நியமிக்கப்பட்டு, அரச நிர்வாக வேலைகளின் தாமதம் தவிர்க்கப்பட வேண்டும்.

விழிப்புலன் இழந்தவர்களுக்கான கற்கை நெறிப் பயிற்சியில் பெற்ற சுவையான நிகழ்வுகள்

இக்கற்கை நெறிப்பயிற்சி நவீல்ட் ஸ்தாபனத்தின் அதிபர் திரு. டேவிட் அவர்களால் தொடக்கப்பட்டது. அதிபரும் சக ஆசிரியை டானியல் அவர்களும் விரிவுரைகளை நெறிப்படுத்தினர். விரிவுரைகளின் போது அதிபர் கையாண்ட நெறிமுறைகள் மிக உன்னதமாகவும் காலத்திற்கு ஏற்படையதாகவும் அமைந்திருந்தன

இவ்வளவு உயர்பண்புகள் நிறைந்த ஆசானை அதிபராகக் கொண்ட நவீல்ட் பாடசாலை மென்மேலும் ஓங்கிவளரும் என்பது நியதி. விழிப்புலன் இல்லாதவர்களுக்கு அறிவு புகட்டுங்கால் அவர் கையாண்ட உத்தி முறைகளும் மனப்பாங்கும் மிக மிக நுட்பதிட்பம் வாய்ந்தவை. அத்துடன் காய்தல் உவத்தல் இன்றி தான் பெற்ற அறிவையும் அவ்றிவால் பெற்ற அனுபவங்களையும் எப்படி எப்படி கற்கைநெறியினைக் கையாண்டு பயிலுநர்களை பூரண தெளிவடையச் செய்தார்.

பயிலுநர் மத்தியில் ஏற்படும் ஐயவினா, அறிவு வினா, அறியும் வினாக்களுக்கு மிகவும் துல்லியமாகவும், கண்ணியமாகவும் விடைதரும் பாங்கு மிகவும் பாராட்டிப் போற்றப்படவேண்டிய தொன்றாகும். இத்தகைய பாங்கன்றோ, விழிப்புலன் இழந்தவர்கள் பாலர் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை சென்றுபடித்துப் பட்டங்கள் பெற்று சுயமாக இயங்கவும் செயல் ஊக்கம் பெறவும் வழி வகுத்ததெனக் கூறுவதில் பெருமை கொள்ள வேண்டியிருக்கிறது. விழிப்புலன் இழந்தவர்களும் மனிதர்கள் அவர்களும் சமுதாயத்தின் நற்பிரசைகள். அவர்களுக்கும் வாழ்வியல் அடிப்படை உரிமைகள் உண்டு.

அத்துடன் அவர்களது உள, மன வளர்ச்சிக்கு முன்னின்று உதவவேண்டும். ஒரு புலனை இழந்தாலும் நான்கு புலன்களாலும் பெரும் வெற்றிச் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். உதாரணமாக மிகவும் திறமையாகப் பாடல்களைப் பாடுவார்கள். மிகத் திறமையாக இசைக்கருவிகளை மீட்டு இசைப்பார்கள். புலன்களை அடக்கியாளப் பழகியுள்ளார்கள்.

விழிப்புலனை இழந்தநிலையிலே அவர்கள் மேல் ஓங்கி சிறப்புகள் பெற்றுள் ஏனைய புலன்களையும் நெறிப்படுத்தினால் எதிர்காலம் பெரும் மேம்பாடுடன் திகழ வாய்ப்பு ஏற்படும். ஐம்புலனையும் வென்றவராகி எல்லாம் கைவரப் பெற்றவராகத் திகழ்வர்.

வெள்ளைப்பிரம்பின் உபயோகம், கண்களை இறுகக் கட்டிய பின்னர் சில செய்கைகளை மேற்கொள்ளல் உதாரணம் வீதியில் நடத்தல், கிணற்றில் நீர் அள்ளல், உணவு பரிமாறி உண்ணல் போன்றவைகள். இச்செயல் ஊக்கம், நாளாந்த வாழ்வில் அவர்களும் தாமே தம்காரியங்களை மேற்கொண்டு உற்றவருக்கும் பெற்றவருக்கும் உலகோருக்கும் சுமையாக இராது தாமே தம் காலில் நிற்றல், எதிர் காலம், அவர்களே அவர்களை பேணிச் சிறப்படையச் செய்தல் தன்னம்பிக்கை என்ற சிறப்பான பண்புக்குரிய செயலூக்கமாக அமைந்தது. உளவியல் ரீதியாக விழிப்புலன் இழந்தோருக்கு உறுதுணையாக செயலூக்கம் அமைகின்றது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

இப்பயிற்சி நெறியின் மிக முக்கிய நிகழ்வாக பன்னிருவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றை கலந்துரையாடி எடுத்துக்கூறியமை. இவர்களில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளும்அடங்குவர். மீதிஅறுவரும் சுமாராகப் படித்தவர்கள் சிறந்த உழைப்பாளர்கள். சிலர் திருமணம் செய்து குழந்தைகளுடன் வாழ்வுக்கு வழி காட்டியாகவும் உள்ளனர்.

குறிப்பு: விழிப்புலன் இழந்தோர் கலவி புனர்வாழ்வு அடிப்படைப் பயிற்சி. இப் பயிற்சி நெறி சித்திரை மாதம் தொடங்கி ஒரு மாதகாலமாக நடைபெற்றது. பயிற்சியில் 28 உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். அறுவர் ஆண்கள் மீதம் பெண்கள். சிறப்பாகப் பயிற்சியை முடித்து சான்றிதழ் எல்லோரும் பெற்றனர்.

இடம்; கைதடி நவீல் பாடசாலை.

விரிவுரையாளர்: அதிபர் டேவிட்,

உதவியாளர்: திருமதிடானியல் ஆசிரியை.

நா. கணேசலிங்கநாதன்
சித்த மருத்துவர்
வட்டுக்கோட்டை.

குடும்பநல சுகாதாரசேவை:

பதவி உயர்வுப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள குடும்ப நல சுகாதார சேவையாளர்களை முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை முதல் தடவையாக யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

முன்னர் இப் பரீட்சை கொழும்பில் நடத்தப்பட்டு வந்தது.

முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்கு கடந்த ஆண்டில் விண்ணப்பித்திருந்த குடும்ப நல சுகாதார சேவையாளர்களுக்கு இதற்கான எழுத்துப் பரீட்சை இம்மாதம் 20-ம் திகதி யாழ் தாதிகள் பயிற்சி பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வாய் மொழிப் பரீட்சை மறுநாள் 21ம் திகதி யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இதற்கான அனுமதிப்பத்திரங்கள் கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் சம்பந்தப்பட்ட குடும்பநல சுகாதார சேவையாளர்களுக்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய சமாஜக் கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாஜ விசேட இடைக்காலப்பொதுக் கூட்டம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மாநரசபை விசேட ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால, தலைமைப் பீட உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ப. பரஞ்சோதி, உள்ளூராட்சித் திணைக்களக் கணக்காளர் திரு. க. ஆ. இரகுநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (139)

பலதும் பத்தும்

ஒரு தினசரி பிறக்கிறது!

1985-மே மாதம் .....ஒரு பூரணைத்தினம். மூன்றுவது தினசரியொன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம்; பங்குபற்றப் பலர் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அன்று காலை பலகோவில்களின் தேர்த் திருவிழா; வழமைபோல் வாகனப் போக்கு வரத்தும் நடைபெறுகின்றது.

திடீரெனப் போக்கு வரத்து ஸ்தம்பிதம்.....நாவற்குழியிலிருந்து இராணுவத்தினர் கால் நடையாக வருதாக ஒரு தகவல்— எங்கும் ஒரே பரபரப்பு!

தினசரியைத் தொடக்கும் கூட்டத்திற் பங்குபற்ற வந்திருந்த பிரதான நண்பர் யாழ். வரத் தவிக்கிறார். அப்பாடா..... பஸ் ஒன்று யாழ் வந்து கொண்டிருக்கின்றது. தவிப்போடு தாவி ஏறி, யாழ். நகரை வந்து பார்த்தால்.....!

நகரம் வெறிச் சோடிக் கிடக்கிறது; கூட்டம் நடைபெற வேண்டிய அலுவலகமே மூடிக்கிடக்கிறது.....!

சனிக்கவில்லை...! வாடகைக் கார் ஒன்றில் நிர்வாகி ஒருவரின் உப அலுவலகத்திற்குப் பறக்கிறார், தினசரி ஆரம்பிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படுகின்றது; குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கையொப்பம் இடப்படுகின்றது.

நெருக்கடிக்கு மத்தியிலும் மீண்டும் வீடு திரும்புகிறார், தனது பணி நிறைவேறியது என்ற திருப்தியோடு.....!

அன்றைய தீர்மானப்படி குறிப்பிட்ட திகதியில் தினசரி பிறக்கின்றது...!

வாணி

பிள்ளையார் குடிகொண்டுவிட்ட சீசெல்ஸ் நாடு

திருவோடு காய்க்கின்ற திருநாடு சீசெல்ஸ். 'ஞான பூமி' ஆசிரியரும் புகழ்பூத்த பயண இலக்கியப் படைப்பாளியுமான திரு. மணியன் அவர்கள் சீசெல்ஸ் நாட்டில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் அடிக்கல் நாட்டினார்.

கடல் கடந்த தெய்வம் விநாயகர். பிள்ளையாரின் வழிபாடு கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து, ஜாவா, போர்னியோ, கம்போடியா, சீனு, யப்பான் நாடுகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே காணப்படுகின்றது. ஆனால் அவரது உருவங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன,

இந்தியர்கள் எந்தெந்த நாடுகளில் குடியேறினார்களோ அங்கெல்லாம் பிள்ளையார் வழிபாட்டைக் கொண்டு சென்றார்கள். காலப்போக்கில் பிள்ளையாரின் பெருமையை அந்தத் தேசத்து மக்களும் உணர்ந்து கொண்டனர். தங்கள் வழிபாடுகளிலும் ஏற்றுக்கொண்டனர்.

இந்துமா கடலின் மேற்குக் கரையில், அள்ளித் தெளித்த முத்துக்கள் போல் ஜொலிக்கும், கருங்கற்கலாலும், பவளங்களாலும் ஆன சுமார் 89 தீவுகளைக் கொண்ட நாடு சீசெல்ஸ். திரைகடல் ஓடியும் திரவியம் தேடப் புகுந்த இந்தியர்கள் இங்கும் குடியேறி வாணிபம் மறறும் தொழில்கள் புரிந்து இந்தியக் கலாசாரம், மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றை இங்கு வளர்த்து வருகின்றார்கள். அண்மையில் 'இந்துக் கோயில் சங்கம்' அமைத்து நிதிசேர்த்துக் கோயில் அமைக்க நிலம் வாங்கினார்கள். இப்பொழுது அவர்களது நெடுநாளைய கனவு நனவாகின்றது.

18-ம் நூற்றாண்டு வரை சீசெல்ஸ் நாட்டில் எவரும் குடியேறவில்லை. முதலில் பிரான்சு மக்கள் ஆபிரிக்க அடிமைகளுடன் அங்கு குடியேறினார்கள். நெப்போலியனுடனான சண்டையின் போது பல தடவைகள் ஆட்சி கைமாறிற்று 1814 ஆம் ஆண்டு 'பாரிஸ் ஒப்பந்தம்' பிரகாரம் ஆங்கிலேயர் வசமாயிற்று.

1976 ஜூன் 26ம் திகதி சுதந்திரம் பெற்றது. பொதுநலவாய நாடுகளுள் ஒன்றாக சீசெல்ஸ் உள்ளது. வெப்பவலயக் காடுகளுக்குரிய சுவாத்தியம். கொப்பரா, கறுவா பிரதான ஏற்றுமதிப் பொருட்கள். இப்பொழுது உல்லாசப் பயணிகளின் வருகையே அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொடுக்கின்றது. 'குட்டி சுவற்சலாந்து' ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுமார் 70,000 வரையான குடிசனம். பல இனமக்கள் அங்கு வாழ்கின்றனர்.

தீவுகளில் பெரியது மாகே தீவு. இங்கு தான் நவீலகர் விக்டோரியா உள்ளது. கிறீன்

(7-ம் பக்கம் பார்க்க)

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் - உரிமையாளரி

விசேட செய்தி

1. திரு. சிலப்பிரகாசம்
(ஆசிரியர்)
சித்தி விநாயகர்
கோவிலடி, அச்சுவேலி.

2. திரு. உமாபதி
(பொலிஸ் உத்தியோகஸ்தர்)
சித்தன்கேணி,
மாவடி வட்டுக்கோட்டை.

3. திரு. சந்திரசேகர் சர்மா
பழம்றோட் பிள்ளையார்
கோவிலடி, கந்தர்மடம்.

4. திரு நிமால்
சண்முகராஜா
கே. கே. எஸ். றோட்,
மாவிட்டபுரம்.

5. திரு. ரகு மயில்வாகனம்
கேசரி வீதி, தையிட்டி,
காங்கேசன்துறை.

6. திரு. எஸ். சுந்தர்ராஜன்
சோதி வீதி, நீர்கொழும்பு.

7. திரு. டி. ராஜன்
பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

★ சில மாதங்களுக்கு முன் நான் எதிர்பாராத விதமாக சென்னையில் சந்
நேர்ந்த ஆயுட் சிறைத் தண்டனையை அடுத்து எனது ஸ்தாபனத்தின் கடமை
ஸ்தம்பிக்கப்பட்டன.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அருட் கருணையால் சிறையிலிருந்து வி
கப்பட்டு, என் மேல் நம்பிக்கையோடு இருந்த பயணிகளுகக நான் கொ
வாக்குத்தவருது பயண ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளேன்.

★ நான் சிறைத் தண்டனையை அனுபவித்த சோதனையான காலகட்டத்தில்,
சிறை மீண்டு வெளியே வரமாட்டேன் என நினைத்த சில விஷமிகள் எ
ஸ்தாபனத்திற்கு எதிராக சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விஷமத்தன
பிரச்சாரம் செய்து எனது ஸ்தாபனத்தின் வளர்ச்சியை முறியடிக்கமுயன்

★ நான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் எனது ஸ்தாபனம் சார்பாக லண்
ஜெர்மன் பயண ஒழுங்குகள் நிறைவேற்றி கொடுக்ககப்பட்ட ஒரு சிலரின் எ
கள், சில விஷமிகளின் விஷமப் பிரச்சாரத்தை முறியடிக்கும் முகமாக உ
முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமது சேவையில் காலதாமதம் ஏற்பட்டமைக்கு வருந்துகிறேம்.

உங்கள் கவனத்திற்கு

நாட்டு நிலைமை சீர் அடைந்து வழமைநிலை திரும்பிக் கொண்டிருப்பதையடுத்தும், எனது மருத்துவக் கல்வி
வேண்டியிருப்பதை முன்னிட்டும், வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கும் பணியை நிறுத்திக்
விரும்புகிறேன்.

★ முன்பு பொறுப்பேற்ற கடமைகள் மட்டும் முடித்துக் கொடுக்கப்படுகின்றன.

★ எனது பெயரையோ ஸ்தாபனத்தின் பெயரையோ பயன்படுத்தி பயண ஒழுங்கு சம்பந்தமாக யாராவது தவரு
சேகரிக்க முயன்றால் உடனடியாக எனது கொழும்பு/சென்னை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தும்படி வேண்டுகி

★ எமது கடந்தகால வியாபார ரீதியான தொடர்புடையோர், எனது கொழும்பு/சென்னை அலுவலகத்தில் எ
தொடர்பு கொள்ளலாம்.

தொடரும் எமது சேவைகள்

நாடு வழமை நிலைக்குத் திரும்பி போக்குவரத்து இலகுவாக செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகியதையடுத்த
நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எமது தென்இந்திய புனித ஸ்தல யாத்திரை மகிழ்ச்சியுடன் மீண்டும் ஆரம்பிக்கின்றே
பதை அறியத்தருகிறேம்.

அடியாருக்கு நாம் அடியோம்!

ஆன்மாவுக்கு அருள் பிரவாகம்:
★ பகவான் சத்யசாயிபாபாவுடன் நேரடி தரிசனம்
★ இருபதுக்கு மேற்பட்ட தலைசிறந்த சிவன், அம்மன், முருகன், விஷ்ணு ஆலயங்கள் வழிபாடு

அறிவிற்கு அரும்பொருள் காட்சிகள்:
★ வரலாற்றுப் புகழ்மிக்க தொல்பொருள் சான்றுகள்
★ தற்காலத் தலைவர்களின் நினைவுச் சின்னங்கள்

புலன்களுக்குப் பேரின்ப அநுபவம்:
★ பங்களூர், மைசூர், கொடைக்கானல், ஊட்டி, குற்றுலம் ரம்மியமான குளு குளு இயறகைக் காட்சிகள்
★ தமிழ்நாட்டின் நுண்கலை ஆக்கங்களை நுகரும் வாய்ப்பு

ஆவலுக்கு அகத்தியர் காண்டம்:
★ இந்தியாவின் தலைசிறந்த அகத்தியர் காண்ட ஜோதிடரிடம் கடந்த, நிகழ், எதிர்கால நிகழ்வுகளை அறிந்திடும் வாய்ப்பு

உடம்புக்கு உல்லாசம்:
★ குளிரூட்டப்பட்ட பஸ்களில் மட்டுமே பயணம்
★ வசதியான தங்குமிடங்கள்
★ தரமான, சுத்தமான உணவு ஏற்பாடுகள்

மனதுக்கு மிக நிம்மதி:
★ நிதி திட்டமிடல், பாதுகாப்புக் கவலைகளிலிருந்து வி

நினைவிற்கு நிழற்படங்கள்:
★ இந்த அநுபவங்களை நிரந்தரமாக உங்கள் அல்பத்தி
விடலாம் - எங்கள் போட்டோகிராபரின் உதவியுடன்

இங்ஙனம் பரிபூரண திருப்தி நிச்சயம்
ஏமாற்றத்தைத் தவிர்க்க விரைவில் உங்கள் பெ
கொழும்பு அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

இல: 33, 1-ம் மாடி, புதிய ஜெமினி கொம்பிளெக்ஸ்,
(ஜெமினி ஸ்ரூடியோவை உள்ளடக்கியது)
602, மவுண்ட் றோட்
சென்னை 600006, தமிழ்நாடு.
தொலைபேசி: 8250779.

கொழும்பு:
107/111, மெட்ரோ ரேட் சென்
இரண்டாம் மாடி, சூப்பர் மார்க்
இரண்டாம் குறுக்குத் தெரு,
(அபீப் பாங்க் அருகாமையில்)
கொழும்பு.

உரிமையாளர்: என். சரவணபவன்

(ஏ

8. திரு. ஜீவா
பிரதான வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.



9. திரு. உதயகுமார்
செல்வரட்ணம்
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

10. திரு. விஜேஜன்
அருமைநாயகம்
அச்சுவேலி வடக்கு.
அச்சுவேலி.

11. திரு. பிறேம் ராஜ்
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

12. திருமதி தயாரதி
தட்சணமூர்த்தி
பாம்ஸ்கூல் பக்கம்,
திருநெல்வேலி.

13. செல்வி உமாதேவி
அப்புத்துரை
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.



14. திரு. தர்மகுலசிங்கம்
(கிளாக்) குடத்தனை
நாகர்கோயில்,
பருத்தித்துறை.

தேர்தல் கடமைகளில் பணிபுரிவதற்கான
உத்தியோகத்தர்களின் விபரங்களை தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்!

(யாழ்ப்பாணம்)

சகல திணைக்களங்களும் அனைத்துத் தேர்தல் வாக்கெடுப்பு நிலையங்களிலும் கடமையாற்றுவதற்கான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்குரிய படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் சுற்று நிருபம் மூலம் கோரியுள்ளார்.

இவ்விபரங்கள் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பகுதித் தேர்தல் உதவி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

சகல திணைக்களங்கள், அலுவலகங்களிலுமுள்ள சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களின், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் எழுது வினைஞர்களின் கடமைக்குத் தகுதியான சகல அரசாங்க அலுவலர்களின் டெயர்சள் புள்ளி விபரம் அடங்கிய நிரல் பட்டியல் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், எப்பெயரும் விட்டுவிடப்படாதவாறு பெயர்ப் பட்டியல் தயாரித்து அனுப்பப்பட வேண்டும் என அற்விக்கப்பட்டுள்ளது. (54)

வீதி சீரமைப்பு

(யாழ்ப்பாணம்)

சேறும், சகதியுமாக நீண்ட காலமாக காட்சியளித்த ஈச்சமோட்டைவீதி, முதலாம் ஒழுங்கை நடைபாதை நேற்று முன்தினம் சீர்செய்யப்பட்டது.

யாழ். மாநகரசபை நீர்விநியோகப் பகுதியினர் மேற்படி நடைபாதையை சீர்செய்தனர்.

யாழ். மாநகரசபை நீர்விநியோகப் பகுதி பொறியியலாளரின் நேரடிப் பார்வையில் சீரமைப்பு வேலை நடைபெற்றது.

மேற்படி வீதி சீர்கேடு பற்றிய செய்தி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

ஒரு லட்சம் இந்திய வம்சாவழியினர்
தாயகம் திரும்புவதும் இலங்கை அகதிகள்
நாடு திரும்புவதும் ஒன்றுக நடைபெற வேண்டும்
இந்திய பிரதித் தூதுவர் கருத்து

(கொழும்பு)

சுமார் ஒரு லட்சம் இந்திய வம்சாவழியினர் தாயகம் திரும்புவதும், இந்திய மண்ணில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் தம்நாட்டுக்கு திரும்புவதும் ஒரே சமயத்தில் இடம் பெறவேண்டும் என்று இந்திய பிரதி தூதுவர் திரு பி. ராத் வலியுறுத்தியுள்ளார்.

இது சம்பந்தமான நடைமுறை சாத்தியங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்சினைகளை சுமுகமாக தீர்ப்பதற்கு இந்திய அரசு தயாராக உள்ளது என இந்திய பிரதி தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கட்டுப்பாடுகளை இந்திய அரசு எப்பொழுதும் மதித்து நடந்து வந்துள்ளது எனவும், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் இந்திய வம்சா வழியினர் தாயகம் திரும்புவதும், இலங்கை அகதிகள் தம் நாடு மீள்வதும், ஒரே சமயத்தில் இடம்பெறும் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளதாகவும், பிரதி தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதே வேளையில் சுமார் ஒரு லட்சம், இந்திய வம்சா வழியினரை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும், தாயகம் திரும்ப தயாராகவுள்ளவர்களுக்கு இலவச விமான ரிக்கட்டுகள் வழங்குவதற்குக்கூட இலங்கை அரசு தயாராக உள்ளது எனவும், அமைச்சர் ரஞ்சன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினையாக இருப்பதினால் இது குறித்து, இந்திய அரசுடன், இலங்கை மீண்டும் புதிதாக பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என இ. தொ. கா. பொதுச் செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

"மண் மக்கள் என்ற உணர்வு வேண்டும்"

(மன்னார்)

"ஒரு கிராமத்தில் பிறப்பிலிருந்து, இறப்புவரை கடமைகளை செய்துவரும் கிராம சேவை அலுவலர்களது. கடமை சமுதாயத்தில் மிகவும் மகத்தானது அதனை மிகவும் நேர்மையாகவும் நம்பிக்கையாகவும்செய்யவேண்டும் கேட்கப்படும் தரவுகளை உடன் உடன் வழங்கவேண்டும் மண் மக்கள் என்ற உணர்வு அவர்களுக்கு வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட லிடதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. அ.சுரேஸ் கிராமசேவையாளர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள 153 கிராமசேவை அலுவலர்களது வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் மன்னார் அல்அசார் மகாவித்தியாத்தில் நடைபெற்றது. இதற்கு ஐக்கிய கிராமசேவை அலுவலர் சங்கத் தலைவர் எஸ். எப். பீரிஸ் தலைமைவகித்தார்.

மன்னார் அரச அதிபரின் பிரதிநிதி தலைமை பீட உதவி அதிபர் திரு. எஸ் எம். குரூஸ் பேசுகையில்; மன்னார் தற்சமயம் நிர்வாகம் செய்தவற்கு எவ்வித தடையுமில்லாத காரணத்தால் வேலைகள் யாவும் சுமுகமாகநடைபெறுகின்றது. கிராம சேவை அலுவலராகிய நீங்கள் அனைவரும் எம்முடன் இணைந்து ஒற்றுமையாகச் சேர்ந்து செயல்படவேண்டும் என்றார்.

தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. லக்ஸ்மன் பேசுகையில்; மக்களை முன்னேற்றச் சகல வழிகளிலும் உதவிபுரியுங்கள். கடமைகளை உணர்ந்து சேவை மனப்பான்மையுடன் பணிசெய்யுங்கள் எனக் கூறினர். தொழிற்சங்கப் பிரமுகர் துரைராசசிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். இக் கூட்டத்துக்கான ஒழுங்குகளை சங்கப் பொதுச் செயலாளர் திரு. ஈ. ஜே. ஜே. மிராண்டா மேற்கொண்டிருந்தார்.

10 - 5 - 1990
வியாழக்கிழமை

மேடம்: புதிய திட்டம், வீண் பிரையாணம், இடாம் பீகச் செலவு.

இடபம்: மனைதிடம், குழந்தைகள் உதவி, அரச தொல்லை.

மிதுனம்: அரசபயம், அலைச்சல், கற்பனை, செல்வாக்கு.

கடகம்: தூரத்துச் செய்தி, ஆடம்பரம், பீடை.

சிங்கம்: உஷ்ணவியாதி, தொந்தரவு, இடமாற்றம்.

கன்னி: ஆஸ்பத்திரி செல்லல், அற்பர்நேசம், வெறுப்பு.

துலாம்: ஆலய தரிசனம், அசதி, கடின வாக்கு.

விருச்சிகம்: உபத்திரவம், தூரத்துச்செய்தி, ஆடம்பரம்.

தனுசு: கடின சிந்தை, வைராக்கியம், செலவு.

மகரம்: கெட்ட எண்ணங்கள், மனநின்மதியின்மை, செலவு.

கும்பம்: பிடிவாதம், உடல் உபாதை, ஆலயதரிசனம்.

மீனம்: இடையூறு, வீண் யோசனை, பெரியோர் உதவி.

இ. மகாதேவா

படித்த இளைஞர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மதிய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 13ந் திகதி காலை படித்த இளைஞர் தினம் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

இக்கல்லூரியில் படித்து, நியாயமற்ற முறையில் எவ்வித விசாரணையுமின்றிக் கொலைசெய்யப்பட்ட செல்வன் கோபாலகிருஷ்ணனை மையமாகவைத்து, இதேபோன்று மற்றைய இளைஞர்களையும் கௌரவிக்குமுகமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விசேட தபால் உறை இரத்துச்செய்யும் நிகழ்ச்சி, தபாற் கந்தோரினால் நடைமுறைப் படுத்தப்படுவதோடு, பல அறிஞர்களும் உரையாற்றுவார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது. (ம)

அரச கூட்டுத்தாபன
ஊழியர்களின் விபரங்கள் சேகரிப்பு!

(அச்சுவேலி)

சேவையிலுள்ள அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களின் விபரங்களை புள்ளித்திணைக்களம் சேகரித்து வருகின்றது.

ஊழியர்களின் தொகை மதிப்பு 1990 என்ற தலைப்புடன் கூடிய மும்மொழிப் படிவத்தின் மூலம் ஊழியர்களில் முழுமையான விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

மே மாதம் 2-ம் திகதி உள்ளபடி மேற்படி படிவத்தை பூர்த்தி செய்து இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக் வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. (74)

மன்னர் செய்திகள்

சுழியில் அகப்பட்டு மரணம்

கடந்த 6ம் திகதி மன்னர் பேசாலைக் கடலில் ஏற்பட்ட கடல் அமுக்கத்தாலும் சுழிக் காற்றாலும், பேசாலையைச் சேர்ந்த இளம் கடற்றொழிலாளி அ. ரவி(வயது-23)என்பவர் சுழியில் அகப்பட்டு பரிதாபகரமான முறையில் இறந்தார்.

கடலில் ஏற்பட்டுள்ள காற்றால் தனதுபடகு கடலுக்குள் மூழ்கப்போகின்றது என்ற பயத்தால் இரவு 7-30 மணியளவில் நீந்திச்சென்று படகை அடைந்து, இயக்கி சிறிது தூரம் படகைச்செலுத்தி நங்கூரத்தை போட்டுவிட்டு, மீண்டும் கரையை நோக்கி நீச்சல் செய்யும் சமயம் சுழியில் அகப்பட்டு மரணமானார்.

அடுத்தநாள் பகல் 1 மணியளவில் சிறுதோப்பு கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்டார். இவர் இருபிள்ளைகளின் தந்தையுமாவார்.

மடு மேதினக் கொண்டாட்டம்

மடுபிரதேசத்தில், தெட்சணமடு கிராமத்தில் அண்மையில் மேதினக்கொண்டாட்டம் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அப்பகுதிப் பாடசாலை மாணவ மாணவிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பொதுமக்களுடன் பாலம்பிட்டியிலிருந்து மடுவரை மாபெரும் ஊர்வலம் ஒன்றை ஆரம்பித்து நிகழ்ச்சிகள் தொடக்கப்பட்டன.

பின்னர் தெட்சணமடு, மருதமடு பாடசாலை மைதானத்தில் பாடசாலை மாணவ மாணவிகளின் உடற்பயிற்சி விளையாட்டுக்களும் அணிவகுப்புகளும் இடம்பெற்றன. இதையடுத்து மாபெரும் பொதுக் கூட்டம் இடம் பெற்றது. இதற்கு பாலம்பிட்டி சிற்றூர் அவைத் தலைவர் திரு. தவம் அவர்கள் தலைமை தாங்கினர்.

உணவு முத்திரை விநியோகம்

(மன்னார்)

வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் 5-வது சுற்றுத் தொடர் உணவு முத்திரைகள் விநியோகம் தற்சமயம் மன்னாரிலுள்ள சகல கிராம சேவை அலுவலர் பகுதிகளிலும் துரிதமாக விநியோகம் செய்யப்படுகின்றன. ஏற்கனவே உணவு முத்திரை வைத்திருந்தவர்களுக்கு மட்டுமே தற்சமயம் வழங்கப்படுகின்றன.

புதிய விண்ணப்பதாரர்களுக்கும் குழந்தைகளுக்கான உணவு முத்திரைக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கும் பின்னர் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னரில் புள்ளி விபரம் கணிப்பு

(மன்னார்)

மன்னரில், அரசாங்க கூட்டுத்தாபன ஊழியரின் கணக்கெடுப்பு (1990-ம் ஆண்டுக்கான) வேலைகள் நடைபெறுகின்றன. இதனையொட்டி, மன்னார் கச்சேரி தலைமைப்பீட உதவி அரசஅதிபர் திரு. எஸ். எம். குரூஸ் சகல கச்சேரியின் பதவிநிலை அலுவலர்கள், கிராமத்தலைவர்கள், தோட்ட உதவி ஆணையாளர்கள் அனைவருக்கும் 9/02 இலக்க சுற்று நிருபத்தை அனுப்பி முதலாம் திகதி முதல் 15-ம் திகதி வரை கணக்கெடுப்பு வேலைகளைச் செய்யுமாறு வேண்டியுள்ளார்.

★ உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப சோவியத் இராணுவம் மறுசீரமைக்கப்படும்

பல புதிய திட்டங்களும் அறிமுகமாகும்

அதிபர் கொர்பச்சேவ் அறிவிப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் இராணுவ அமைப்பு முற்றாக மறுசீரமைக்கப்படவுள்ளதாக அதிபர் மிகையில் கொர்பச்சேவ் அறிவித்துள்ளார். பல புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாஸி ஜேர்மனியை வெற்றி கொண்ட 45-வது வருட நினைவு நாளைக்குறித்து நேற்று சோவியத்தில் பெரும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. மாஸ்கோவில் இராணுவ அணி வகுப்பும் இராணுவ தளபாட காட்சியும் நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அதிபர் கொர்பச்சேவ் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

"உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை முன்னிட்டும் சோவியத் யூனியனின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலினாலும் இராணுவ கட்டமைப்பு மறுபரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் பல புதிய திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து செல்ல முயலும் சில குடியரசுகளுக்கு சாத்வீக ரீதியிலான எச்சரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. இவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் அனுகுமுறைகளை மாற்ற வேண்டிய தொரு நிலையும் ஏற்படுமென்றும் அவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

நாஸி ஜேர்மனியை வெற்றி கொண்ட 45-வது வருட நினைவை கொண்டாடும்முகமாக நேற்று நாடெங்கிலும் பல லட்சக்கணக்கான மக்கள் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

நீதிபதியை ஆயுதத்தால் தாக்கிய இளைஞன்

(நியூஸிலாந்து)

16 வயது இளம் குற்றவாளியான இளைஞன் திடீரென ஓடிச்சென்று நீதிவிசாரணை மேற்கொண்டிருந்த 60 வயது பெண் நீதிபதியின் முகத்தில் கூரிய ஆயுதத்தினால் தாக்கி படுகாயம் விளைவித்த விபரீத நிகழ்ச்சி ஆக்லாந்து இளம் குற்றவாளி நீதிமன்றத்தில் நிகழ்ந்துள்ளது.

இத்தாக்குதலில் நீதிபதி பலத்த காயமடைந்தபோதிலும் உயிராபத்து ஏற்படாமல் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டார் என்று தலைமை சுப்பிரிண்டன் சிம்மோர்கன் தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் ஓட்டியதாகவும் பொலிஸாரைத் தாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட மேற்படி இளைஞனை எவ்வாறு திருத்தி நல்வாழ்க்கைக்கு கொண்டுவர முடியும் என்று நீதிபதி பெற்றோரிடம் கலந்துரையாடிக் கொண்டிருந்த சமயம். இளைஞன் திடீரென்று நீதிமன்ற அறையினுள் ஓடிச்சென்று கூரிய ஆயுதத்தினால், நீதிபதியை தாக்கியதாகவும், காவலுக்கு நின்றிருந்த பொலிஸ் அதிகாரி, இடைமறித்து மேற்கொண்ட பதில் தாக்குதலினால் நீதிபதியின் உயிர் காப்பாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (அ)

சிறைச்சாலையில் பெரும் தீ 37கைதிகள் கருகிமாண்டனர்!

(புவனஸ்அயஸ்)

ஆர்ஜன்ரீனா தலைநகர் புவனஸ் அயஸில் மத்திய சிறைச்சாலையில் இடம்பெற்ற பாரிய தீவிபத்தில் 37 சிறைக்கைதிகள் கருகி மாண்டுள்ளனர். மேலும் 26 பேர் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகினர். பலரின் நிலை கவலைக்கிடமாயுள்ளது.

சிறைக்கைதிகளுக்கிடையில் இடம்பெற்ற கலவரத்தால் சமயலறைப்பகுதியில் வாயு அடுப்பொன்று வெடித்துச் சிதறி அருகிலிருந்த துணி மூட்டைகளும், காயப்போடப்பட்டிருந்த துப்பட்டிகளும் தீப்பற்றிக்கொண்டனவாம்.

இதனால் அப்பகுதியிலிருந்த சுமார் நூறு கைதிகளில் 37 பேர் தீக்குள்சிக்கி கருகி மாண்டனர். 26 பேர் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்கள். ஏனையவர்கள் சிறுசிறு தீக்காயங்களுடன் சமயலறைப் பகுதியையுடைத்துக்கொண்டு தப்பிவிட்டனர்.

தற்போது சிறைச்சாலைப் பகுதி காவலர்களின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் கைதிகளிடையே பெரும் பதற்றம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

பலரின் நிலை கவலைக்கிடம்

23,000 பிச்சைக்காரர்கள்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், திருமலை மாவட்டங்கள் தவிர்ந்தஏனைய பகுதிகளில் 23,000 தெருப் பிச்சைக்காரர்கள் நடமாடி வருவதாக சமூக சேவைநல அமைச்சர் அண்மையில் எடுத்துள்ள புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

பிச்சைக்காரர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் நோக்குடன் சுமார் 3000 பேர் சமூக சேவை நலப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர் நிலையம் நடத்தும் இடைநிலை மற்றும் இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 19, 20, 26ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (153)

நக்ஸலைட் தாக்குதலில் ஐவர் பலி!

[ஹைதராபாத்]

ஆந்திர பிரதேசத்தில் 'நக்ஸலைட்' டுகள் மேற்கொண்ட தாக்குதலில் முக்கிய கட்சித் தலைவர் ஒருவர் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து சம்பவம் நடைபெற்ற இடங்களில் நூற்றுக்கணக்கான பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆந்திராவில் கிராமப்புறப் பகுதிஒன்றில்நேற்றுமுன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுமார் 30 நக்ஸலைட்டுகள் ஆயுதங்கள் சகிதம் இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

பல மோசடிக் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாக கூறப்படும் அரசியல் கட்சித் தலைவரும் அவரது முக்கிய ஆதரவாளர்களும் இந்தக் கிராமப் புறப்பகுதிக்கு வந்திருந்தபோதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ஆந்திரா - கேரள எல்லைப் பகுதியில் கடந்தசில வருடங்களாக நக்ஸலைட்டுகளின் தாக்குதல் பெருமளவில் இடம்பெற்று வருவது பொலிஸாருக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

தாய்லாந்தில்

கிருமிநாசினி பாவனையால் 1லட்சம்விவசாயிகள் பாதிப்பு

(பாங்கொக்)

தாய்லாந்தில் சுமார் ஒரு லட்சம் விவசாயிகள் கிருமிநாசினிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரம்ஒன்று தெரிவித்துள்ளது. இதில் 50 வீதமானவர்கள் மிக மோசமான உடல் நோய்களுக்குள்ளாகியுள்ளனர்.

விவசாய வேலைகளில் ஈடுபடும் இவர்கள் வெறும் கால்களுடனும் பெருமளவில் வெற்றுடம்புடனும் வயல்களில் நிற்பதால் தெளிக்கப்பட்ட கிருமிநாசினிகளின் மோசமான பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

சுமார் 500 பேரிடையே எடுக்கப்பட்ட புள்ளிவிபரம் ஒன்றின்படி 51.3 வீதமானவர் இரப்பை புற்றுநோயினாலும், ஈரல் வியாதிகளாலும். தசைகளில் பெரும் கட்டி ஏற்பட்டும் அடிக்கடி மயங்கி விழுவதாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 வீதமானவர்கள் மிக மோசமான வர்கள் தோல் நோய்களாலும், வாந்தியெடுத்தலினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

5 வீதமானவர்கள் அடிக்கடி கடும் தலைவலி காய்ச்சலுக்குள்ளாகி பெரும் அவதியுறுவதாகவும் தெரியவருகிறது. இவர்களுக்கு கிடைக்கும் மருத்துவ உதவிகளும் மிகக் குறைவாகவே கிடைப்பதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவு கிருமிநாசினி விநியோகமும், மேலதிக இரசாயன பசளைகளுமே இதற்கு முக்கிய காரணமென்றும் சாதாரண பாதுகாப்பு எதுவுமின்றி வயலில் வேலையிலீடுபடுவதாலும் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (சி)

பிலிப்பைன்ஸில்

மீண்டும் இராணுவப் புரட்சி? அமெரிக்காவிற்கு எச்சரிக்கை

புரட்சிப்படைத் தளபதி அறிவிப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் மீண்டும் இராணுவப் புரட்சி மேற்கொள்ளப்பட்டு அதிபர் திருமதி அக்கினோவின் ஆட்சி கவிழ்க்கப்படுமென இராணுவத்திலிருந்து வெளியேறி புரட்சிப்படைக்கு தலைமை வகிக்கும் முன்னாள் இராணுவ தளபதி ஒருவர் எச்சரித்துள்ளார்.

வலதுசாரி புரட்சிப்படைத் தலைவர் கேர்னல் கிரிகரியோ ஹொனசன் (வயது 42) பத்திரிகையாளர்களுக்களித்த பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த காலங்களில் நடைபெற்ற புரட்சிகளின்போது அமெரிக்க படைகளின் தலையீட்டால் அவை சாத்தியமில்லாது போய்விட்டன. எதிர்காலத்தில் நடைபெறும் இவ்வாறான புரட்சி நடவடிக்கைகளின்போது அமெரிக்க தலையீடு இருந்தால் அமெரிக்கா மோசமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இதற்கான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது எமது படைப் பிரிவில் 5,000ற்கும் மேற்பட்ட சிறந்த பயிற்சிபெற்ற ஆயுதபாணிகள் உள்ளனர். இவர்களைவிட இராணுவத்திலும் எமக்கு ஆதரவான பெரும் பிரிவும் செயற்பட்டு வருகிறது. இதன் மூலம் திருமதி அக்கினோவின் ஆட்சி விரைவில் கவிழ்க்கப்படும் என்றார்.

இதற்கிடையில் இப்புரட்சிப் படையின் தாக்குதலை சமாளிக்கும்வகையில் திருமதி அக்கினோ, அரசை எதிர்த்துப் போராடிவரும் வலதுசாரி கம்யூனிஸ் கெரில்லாக்களுடன் இரகசிய தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

தராசு படிகளுக்கு

முத்திரையிடும் வேலைகள் துரிதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில் தினமும் வியாபாரிகளின் நிறுவைகள் அளவைகள் கருவிகள் தராசு படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள நிறுவைகள், அளவைகள் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

திருநெல்வேலிச் சந்தை வியாபாரிகள் அனைவரும் தமது தராசு படிகளுக்கும் லீற்றர், மீற்றர் அளவைகள் மேடைத் தராசு, தூக்குத் தராசுகள் போன்றவற்றுக்குத் தவறுது முத்திரை இட்டுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

சகல வியாபாரிகளும் தமது தராசுப் படிகள் அனைத்தையும் நேரில் கொண்டுவந்து முத்திரையிட வேண்டுமென்றும், தவறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அளவைகள் நிறுவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் எச்சரித்துள்ளார். (54)

ஓய்வு பெற்றனர்

(பண்டத்தரிப்பு)

யாழ் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 10 வருடங்களாக எழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. கே. பரமேஸ்வரன், தட்டெழுத்தாளராக கடமையாற்றிய திரு. எஸ். சிவசிதம்பரம் ஆகியோர் ஓய்வுபெற்றுள்ளனர். (72)

"6-வது ஷரத்து நீக்கம் இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்தும்!"

[கொழும்பு]

"எமது அரசியல் கருத்துக்கள், எண்ணங்கள். அபிப் பிராயங்களைச் சுதந்திரமாக வெளியிடும் உரிமையை நாம் பெற்றுக்கொள்வதற்காகவே ஆறுவதுஷரத்தை நீக்கக்கோருகினறோம். இந்த ஆறுவது அரசியல் திருத்தச் சட்டம் சுமார் ஏழு வருடகாலமாக தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் குறுக்கீடு செய்து அவர்களை அன்னியப்படுத்திக் கொண்டு வர வழிவகுத்துள்ளது. இது தேசிய ஐக்கியத்தைக் கட்டிக்காக்கப் பயன்பட எந்த விதத்திலும் உதவாது. மாறாக இந்த ஷரத்து நீக்கப்படுவதால் நம்பிக்கையும் நல்லெண்ணமும் தமிழ் மக்களிடையே ஏற்பட வழிபிறப்பதோடு சமரசமும், இனங்களுக்கிடையே நல்லுறவு சமாதானம் ஆகியன ஏற்பட வழி வகுப்பதாக இருக்கும்'

இவ்வாறு விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் 'ஐலன்ட்' ஆங்கில பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி விடுவதற்கு எதிர்க் கட்சியினரும் மேற்படி இயக்கத்துக்கு விரோதமானவர்களும் திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுத்து வருவது போல் தெரிகிறது. இதன்மூலம் வீணான பதற்ற நிலையைத் தோற்றுவித்து, தற்போதைய நிலைமையை மோசமாக்கிவிட அவர்கள் முனைகின்றார்கள் போல் தோன்றுகிறது. "இது அபாயகரமான தொரு சூழ் நிலையைத் தோற்றுவிக்கும்" என்று தெரிவித்த டாக்டர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்ட பத்திரிகையின் நிருபர் கேட்ட சில கேள்விகளுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்;

"எமது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள் தீர்க்கப்படு முன்னர், அவர்களது பாதுகாப்புக்கான உத்தரவாதம் அளிக்கப்படுமுன்னர், ஆயுதங்களை ஒப்படைப்பது, கைவிடுவது என்பதை எம்மைப் பொறுத்தவரை ஏற்கொள்ள முடியாத தொன்று.

"இதுபற்றி நாம் இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவாக்கி - அன்ரன் பாலசிங்கம்

யுள்ளோம். வடக்கு கிழக்கு மாகாண சபைகளைக்கலைத்து ஆறுவது ஷரத்தை நீக்குவதற்கு ஏற்ற ஒழுங்கினை மேற்கொள்ளாவிட்டால் வடக்கு கிழக்கில் பாரதூரமான விளைவுகளேற்படும்.

"தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் தமது நிர்வாகத்தை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்கினை விரைவாக செய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென நாம் எதிர்

(8-ம் பக்கம் பார்க்க)

சேவை நலம் பாராட்டு விழா

[பண்டத்தரிப்பு]

பதவியிலிருந்து அண்மையில் ஒய்வு பெற்ற சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய அதிபர் திரு. கே. நடராசா, சங்காணை அமெரிக்கமிஷன் த.க. பாடசாலை அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் ஆகியோருக்கு பண்டத்தரிப்புக் கொத்தணி அதிபர்களினால் சேவை நலம் பாராட்டு வைபவம் நடாத்தப்பட்டது.

பண்டத்தரிப்புக் கொத்தணி அதிபரும், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபருமான திரு. தே. தம்பிராசா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா, சங்காணை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் திரு. க. சந்திரபாலன், சித்தன்கேணி கணேசவித்தியாலய அதிபர் திரு. க. நல்லையா, சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய அதிபர் திரு. சி. குணரத்தினம் ஆகியோர் உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர்கள். (72)

பிள்ளையார்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விச் நேரத்தில் இருந்து 4மணி நேரம் அதிகம். சர்வதேச விமான நிலையம் மாகே தீவில் உள்ளது.

அரசகரும மொழி ஆங்கிலம். பிரான்ஸ் மொழி அனேகருக்குத் தெரியும். நாட்டின் பெரும் பான்மையினரால் பேசப்படும் மொழி கிறியோல். இங்குள்ள நாணயம் சீசெல்ஸ் ரூபாய் சதம் ஆகும். 90 சத விகிதத்தினர் உரோமன் கத்தோலிக்கர்கள். இங்கு செல்வதற்கு 'விருந்தினர் அனுமதி' பெறவேண்டும். இது விமான நிலையத்தில் வைத்தே விருந்தினராகச் செல்பவர்கட்கு வழங்கப்படும். சுவாத்தியமும், அழகான கடற்கரைகளும், இயற்கை அழகும், உல்லாசப் பயணிகளைக் கவர்கின்றன. திரு. அல்பேட் இரனே சீசெல்ஸ் நாட்டின் தலைவராக இருந்து அரசை வழிநடத்துகின்றார். மொரீயசிஸ் நாடு சீசெல்ஸ் நாட்டின் தென்பால் உள்ளது. அண்மையில் மொரீசியஸ் நாட்டில் உலக தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றது யாவரும் அறிந்ததே. சீசெல்ஸ் நாட்டிலும் தமிழ் மணம்வீசி, உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெறும் காலம் வெகுதூரத்தில் இல்லை என எதிர்பார்க்கலாம்.

வை. இரகுநாதமுதலியார்

ஆங்கில பேச்சுப் போட்டி: தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் தொடர் கல்வி நிறுவனத்தில் நடத்தப்பட்ட ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கல்விப் பிரிவில் ஆங்கிலப் பேச்சு பயிலும் எண்பது மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு தொடக்க நிலையில் 19 பேர் அதிவிசேட சித்தியும் 22 பேர் விசேட சித்தியும், 15 பேர் சாதாரண சித்தியும் பெற்றனர். ஆரம்ப நிலையில் தோற்றிய 5 பேரில் 2 பேர் அதிவிசேட சித்தியும் 3 பேர் விசேட சித்தியும் பெற்றுக் கொண்டனர்.

தொடக்க நிலையின் அதிவிசேட சித்தி பெற்றவர்கள்: கு. விதரணி, ந. நர்மதா, இ. நிரோஷா, சி. கயல்விழி, அ. அபரிஞ, சி. சைலந்தி, ச. மதுசூதன், ஜெ. நிசா, பா. கஜனி, நி. நிஷாந்தினி, சி. மலர்விழி, செ. ஜீவபிரதாப், அ. அனுபபூலன், க. சிஞ்ஜெனு, நி. மயூரன், க. மதிலா, ச. அனுலா, வ. ஜனனி, ந. செகநீசன்.

விசேட சித்தி பெற்றவர்கள்: கு. சுரநயனி, வ. கோகுலன், வ. விபிசாளினி, க. கஜருபன், க. சுலக்சனு, ஜெ. நிரோஷ, ந. மதிசுதனன், பு. சிவாகினி, த. சிறிபிரியா, த. கலாபன், சி. அனிதா, ச. கஜனுத், நா. ராஜி. இ. இரவீனு, நா. சுவர்ணு, மு. மயூராஜ், பி. நர்த்தனன், பா. காவேரி, ப. கஜேந்திரா, பா. பிரபாசினி, த. காயத்திரி, ம. பிரசாந்தினி.

ஆரம்ப நிலையில் அதிவிசேட சித்தி: நா. பூங்குனலி, வி. பிரயலேனுகா. விசேட சித்தி: அ.கிறிஸ்ரா நிஷாந்தினி, ச. அனுசாஞ்சலி, சி. மலர்விழி.

பிரிவு 1: அதி விசேடசித்தி: த. சேரலாதன், ச. துர்க்கா. நா. யசோதா, ப. கார்த்திகாயினி.

விசேட சித்தி: ப. கஸ்தூரி, கா. பிரசாந்தினி.

ஆசிரியர் சங்க ஆட்சிமன்றக் கூட்டம்

[அச்சுவேலி]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிமன்றக் கூட்டம் இன்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

ஆட்சிமன்றக் கூட்டத்தில் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு மற்றும் முக்கிய விஷயங்கள் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. [74]

பஸ் சேவை இல்லை

(ஆனைக்கோட்டை)

கோப்பாய் ராஜவீதி ஊடாக எதுவித வாகனப் போக்குவரத்தும் தற்போது இலலாதிருப்பதால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகிறார்கள்.

இந்த வீதியால் போக்குவரத்திலீடுபட்டுருந்த இ.போ.ச. பஸ் சேவை சுமார் ஆறு வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலை காரணமாக இப்பகுதி மக்கள் சுமார் ஒரு கி.மீ. வரை நடந்து சென்றே பஸ் அல்லது வானைப் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருகிறார்கள். (139)

புலிகளின் பாதுகாப்பு நடவடிக்கை

[மட்டுவில்]

சாவகச்சேரி சந்தைப் பகுதி சைக்கிள் பாதுகாப்பு நிலையம் தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச பிரிவின் பொறுப்பில் மாறியுள்ளது.

இதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் சைக்கிள்பாதுகாப்புடன் மட்டுமன்றி சந்தைப் பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை செலுத்துகிறார்கள். [82]

30 இளைஞர்களுக்கு 6 மாத கால கடற்றொழில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஐனசக்தி திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கடற்றொழிலில் ஈடுபடும் குடும்பங்களைச் சேர்ந்த முப்பது இளைஞர்களை தேர்ந்தெடுத்து கடற்றொழில் சம்பந்தமாக பயிற்சிகள் அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆறுமாத காலம்வரையிலான மேற்படி பயிற்சி விரைவில் யாழ். கடற்றொழில் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

இந்த பயிற்சியில் கடற்றொழில் சம்பந்தமான பயிற்சி உள்ளீர்ப்பு வெளியீர்ப்பு இயந்திரங்களைத் திருத்தும் பயிற்சிகள் ஆகியவையும் அடங்கியிருக்கும். (153)

ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ஸ்ரோ விளையாட்டுக்கழகத்தின் 22வது ஆண்டு நிறைவு விழாவும் அமரர் க. தனபாலசிங்கம் ஞாபகார்த்த விளையாட்டு விழாவும் விரைவில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்படியும் நடக்கிறது

சுகாதார சேவைப்பகுதியில் ஏற்பட்ட 150 வெற்றிடங்களுக்கு அண்மையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டது

எக்கச்சக்கமான விண்ணப்பங்கள் மலைபோல் குவிந்துவிட்டன!

விண்ணப்பதாரர்களில் சுமார் எண்பத்து ஏழாயிரம் விண்ணப்பங்கள், ஜி.எஸ்.ஈ. (உயர்தர), ஜி.எஸ்.ஈ. (சாதாரணம்) தரத்தில் சித்தியடைந்தவர்களிடமிருந்து வந்திருந்தன.

வெற்றிடங்கள் எந்தப்பகுதிக்கு என்று நீங்கள் கவனிக்கவில்லையே! தொழிலாளர் தரத்திலான வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

* *

பாணின் விலை விரைவில் ஒரு ரூபா இருபத்தைந்து சதத்துக்கு வரப்போகிறது!

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி குறைந்த விலையில் பாண் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இப்பாண் முதலில் கொழும்பு நகர்ப்புறத்தில் விற்பனைக்கு விடப்படும் என்றும் அதனைத்தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அமைச்சர் தெளிவாகக் கூறினர்.

இப்பாணின் நிறை நூறு கிறுமாகத்தானிருக்கும். இதுவும் அமைச்சர் சொன்னதுதான்!

'ஊடுருவி'

"நிவாரணக் கொடுப்பனவுகள் பின்தங்கிய மக்களுக்கு கிடைக்கவில்லை" - 'பாப்பா

(மட்டுவில்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்ட சிற்றூரவைகளின் தலைவர்கள், செயலாளர்களுக்கும், கிராம சேவை அலுவலர்களுக்குமிடையில் நெருக்கமான தொடர்பு அமைந்திருக்க வேண்டும்':

இவ்வாறு தமிழீழ வி.பு.ம.மு. தென்மராட்சி பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம சேவை அலுவலர்களையும் அழைத்து திரு. பாப்பா ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர்.

அவர் கருத்து வெளியிடுகையில்: கிராம மக்கள் இன்று மிகவும் பாதிப்படைந்த நிலையில் உள்ளனர், அவர்களுக்கு நிவாரணங்கள் உணவு முத்திரை விநியோகங்கள் மற்றும் கொடுப்பனவுகள் செய்யப்படவேண்டியது அவசியம்.

இந்த விநியோகங்கள் நிவாரணம் கொடுப்பனவுகள் மிகவும் பின்தங்கிய சில மக்களுக்கு கிடைப்பது கஷ்டமாக உள்ளது. இதுவே இங்கு ஊழல் என்ற பெயரைப் பெறுகிறது. இந்த ஊழல்கள் களையப்பட வேண்டும். ஒவ்வொரு கொடுப்பனவுகளும் ஒழுங்காக உரியவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். இதைநாம் கண்காணிக்க வேண்டும். இப்படிக் கண்காணிப்பதின் மூலம் பல ஏழை மக்களின் கண்ணீர் துடைக்கப்படுகிறது.

கிராம சேவை அலுவலர்கள் தத்தம் பகுதி சிற்றூரவைத் தலைவர், செயலாளர்களுடன் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்' என்றார். (82)

இன்று ஸ்ரீராம பட்டாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தில் தினமும் நடைபெற்று வந்த சம்பூர்ண ராமாயண விரிவுரை இன்று ஸ்ரீராம பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாகின்றது. நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் 'கானகதாவாரிதி' பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவினால் மேற்படி தொடர் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டு வந்தது. இன்று பூர்த்தி விழாவும் நடைபெறும்.

இன்று

(யாழ்ப்பாணம்)

இணுவில் செகராசப்பிள்ளையார் பிள்ளைத் தமிழ்நூல் வெளியீடு இணுவில் செகராச சேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் பாடிய மேற்படி நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக் கழக கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்த யாழ் பல்கலைக்கழக கலாநிதி இ. பாலசுந்தரம் வெளியீட்டுரை வழங்கவிஞர் சோ. பத்மநாதன், திரு. கனக சபாபதி நாகேஸ்வரன், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவார்கள்.

கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

''வட்டுக்கோட்டை செமினரியும் 19-ம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சியும்', என்ற தலைப்பில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் நாளை 11-ம் திகதி பிற்பல் திருநெல்வேலி எவ்வினின் இரத்தினம் பல்வினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பிப்பார், [153]

தமிழீழ இணக்கமன்று

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்று'' என்ற கைநூலை வெளியிட்டுள்ளோம். இவ் அமைப்பு விதிகளுக்கிணங்க ஒவ்வொரு சிற்றூர் இணக்க மன்றும் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- இவ் இணக்க மன்றுகள் சிறப்பாக இயங்க மக்களாகிய உங்களது ஒத்துழைப்பு எமக்குத் தேவையாகும். இவ்விணக்க மன்றுகள் அமைப்பதில் மட்டுமல்ல அவற்றை மேற்பார்வை செய்வதுடன் அவை தொடர்பான ஆக்கபூர்வமான ஆலோசனைகள் எமக்குத் தரவேண்டியது பொதுமக்களாகிய உங்கள் கடமையாகும். எனவே இவ் இணக்க மன்றுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தங்கள் ஆலோசனைகளையும். கருத்துக்களையும், தெளிவாகவும்' சுருக்கமாகவும் எழுதி இணக்க மன்ற பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம். தர்மபுரம் என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது உங்கள் பிரதேசப் பொறுப்பாளர் மூலமாகவோ அனுப்பு மாறு வேண்டுகின்றோம்.'

''தமிழீழ இணக்க மன்று'' என்னும் கைநூலின் பிரதி தேவையானால் உங்கள் பகுதி இணக்கமன்று செயலாளரு

அரசு-புலிகளுக்கிடையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பத்திரிகைகள்மூலம் அறிக்கை விடுத்திருக்கின்றாரே எனக் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

பேட்டியின் முழு விபரங்களும் இங்கு கேள்வி -பதிலாக தரப்படுகிறது,

கே;- இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏதும் முகமேகள் உண்டா?

ப:: தற்போது இந்தியாவில் தமிழீழ விடுதலை புலிகளுக்கு எந்தவொரு முகாமும் கிடையாது.

கே: மலையகத்தில் வாழும் ஒரு லட்சம் இந்திய வம்சாவழியினரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது பற்றி?

ப: அவர்கள் இந்நாட்டின் குடிமக்கள். எனவே அவர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது. சிறிலங்கா அரசின் இந்த அறிவிப்பு, ஒருசிலரின் கருத்துப்படி சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட அறிவிப்பாகும்.

இந்த அரசானது தமிழ் பேசும் மக்களுக்குப் பல சலுகைகளை வழங்குவதாகச் சில எதிர்க்கட்சிகள் குரலெழுப்பும் இந்தக் காலகட்டத்தில் ஒரு லட்சம் மலையகத்தமிழ்மக்களை நாட்டைவிட்டு அனுப்புவதன் மூலம் அவர்களைத் திருப்திப் படுத்துவதோடு, சிங்கள மக்களையும் இனவாத உணர்வையும் திருப்திப்படுத்த முனைகின்றது.

இந்த அறிவிப்பு மட்டுமல்ல இன்று மலையகத்தில் வாழும் பல இளைஞர்கள் சிங்கள அரச படையினரால் கைதுசெய்யப் பட்டுக் காணாமற்போகின்றார்கள் என்ற செய்தியும் அங்குள்ள நிலைமை பற்றி நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

கே: ஆறாவது ஷரத்து நீக்கப்படாத நிலையிலும் தேர்தல்

டன் ரூபா 5 (ஐந்து) செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

களுக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றனவே?

ப: தமிழ்மக்களின் சுதந்திரத்திற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய ஆறாவது ஷரத்தை நீக்காதவரை நாம் எந்தவித தேர்தல்களையும் சந்திக்கமாட்டோம் என்பதோடு எவ்வகையிலும் எமது இலட்சியத்தையும் வாக்குறுதிகளையும் விட்டுக்கொடுக்கமாட்டோம் என்பதும் உறுதி.

கே: பத்திரிகைகளுக்கென தங்களால் ஏதாவது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதா?

ப: பத்திரிகைகளுக்கு நாம் எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை. தமிழ்பேசும் மக்களது பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் செய்திகளை அவதானத்துடன் கையாள வேண்டுமெனவிரும்புகின்றோம்.

கே: பாராளுமன்றத்தால் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளனவா?

ப: பாராளுமன்றத்தால் இதுவரை தமிழ்மக்களின் எந்தவொரு நியாயமான பிரச்சனையும் தீர்க்கப்படவில்லை.

கே: விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறுமா?

ப: நடைபெறலாம் என்ற கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள். இவையெல்லாம் ஊகங்களே தவிர, ஒருவருக்குமே தேர்தல் நடைபெறுமா என்பது தெரியவில்லை.

கே: இங்கிருந்து இந்தியா சென்றுள்ள குழுக்கள், தங்கியிருப்பதுபற்றி?

ப: அதுபற்றிய கவலையை இந்தியா ஏற்கட்டும்; நாம் விழிப்புடன் செயல்படுவோம்.

கே; அண்மைக்காலத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர்கள் உரைகள், பேச்சுக்கள் யாவும் பொதுவாக மீண்டும் ஒரு போர் ஏற்படலாம் என மக்களை நினைக்க வைக்கின்றதே?

ப: இன்று போரற்ற அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. இதற்கு அர்த்தம் எமது பிரச்சனைகள் யாவும் தீர்க்கப்பட்ட தென்று அல்ல. சிங்கள இனவாதம் என்பது சிங்கள மக்களிடையே ஊறிப்போயுள்ளது. இதைநாம் மறந்துவிடக் கூடாது எனவே தான் நம் மக்களை எல்லாச் சூழ்நிலைக்கும் ஆயத்தமாக விழிப்பாக இருக்கும்படி வேண்டுகின்றோம். (51)

316 அடகு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை;

இவற்றைப் பெறத் தவறியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளக் கடைசிச் சந்தர்ப்பம் இவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

இதன்படி இம்மாதம் 11ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்கள் வந்து தமது நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:

கடந்த வருடம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பணம் செலுத்தியவர்களது நகைகள் கடந்த மாதம் மீளளிப்பதற்காக 13,337 நகைகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

இந்த நகைகளில் 316 நகைகள் இதுவரை உரியவர்களினால் மீளப் பெறுமல் உள்ளன. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 14 கிளைகளில் அடகுவைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகளே அடங்குகின்றன என்றார். (153)

சாம் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமரர் சாம் தம்பிமுத்து சிறந்த வழக்கறிஞராக இருந்ததோடு, பாராளுமன்ற விவாதங்களில் உற்சாகத்தோடு பங்குபற்றுபவர் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக மரபு தழைத்தோங்குவதற்காக அமரர் தம்பிமுத்து ஆற்றிய பங்களிப்பு நீண்ட காலத்திற்கு நினைவு கூரப்படும்.

சமாதானத்தை விரும்பும் சகலமக்களும் இந்தக்கோழைத்தனமான செயலைக் கண்டிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி கலா தம்பிமுத்து குணமடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மறைவினால் துயருற்றுள்ள அவரது மனைவி, மகன், உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். [து]

சாம் தம்பிமுத்துவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன, சிறிலங்கா மக்கள் கட்சித்தலைவர் திரு. ஒலி அபயசேகரா ஆகியோரும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

காலம் சென்ற சாம் தம்பிமுத்துவின் குடும்ப உறவினர்களும் பெரும்தொகையான பொதுமக்களும் அவரது பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினர்கள்.

சுவிஸிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந. சத்தியசீலன் கூறியதாவது கடந்த 3-ம் திகதி எனது அறையிலிருந்து வேலைக்குச் செல்வதற்கு தயராகிக் கொண்டிருந்தபோது எனது அறைக்குள் நுழைந்த பொலிஸார் விசாரணை செய்யப் போவதாகக்கூறி பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

அங்கு எனது பாஸ் போர்ட்டை என்னிடம் வழங்கி உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

அத்துடன் அங்கிருந்து கொண்டே ரெலிபோனில் இலங்கைக்கு அனுப்புவதற்கான டிக்கெட் எடுக்கப்பட்டது. இதற்கு என்னிடமே பணம் பெறப்பட்டது.

இத்திடீர் நடவடிக்கையால் அதிர்ச்சியடைந்த நான், நான் என்ன குற்றம் செய்தேன் எதற்காக என்னை திருப்பி அனுப்புகிறீர்கள் எனக்கேட்டபொழுது அதற்கு அவர்கள் ஏற்கனவே உங்களுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு திகதியும் குறித்தும் கடிதம் ஒன்று வழங்கினோம் நீங்கள்நாட்டை விட்டு வெளியேறவில்லை அதனால் தான் இந்த நடவடிக்கை என்றும் இதுபோன்றே ஏனையவர்களும் திடீரென அனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

நான் வேலைக்கு செல்லும் உடையுடனும், எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படாமல் நாடுகடத்தப்பட்டேன். (து)

யாழ்.ஆஸ்பத்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7 மாதங்களாக இடம்பெற்றுவரும் இந்தஅவலநிலை பற்றி யாழ். ஆஸ்பத்திரி பதிவுக் காரியாலயத்தில் கேட்டபோது, பிறப்பு அத்தாட்சிப் பதிரத்திற்கான புதிய பிரதிகள் கையிருப்பு முடிவடைந்துள்ளதாகவும், இப்பத்திரங்கள் யாழ். கச்சேரியிலும் முடிந்துவிட்டதாகவும், கொழும்பிலிருந்து புதுப் பிரதிகள் வந்தபின்தான் பிறப்புப் பத்திரங்கள் வழங்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (56)

யாழ்.மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது'' என்று யாழ். மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முழங்காவிலில் கிராமிய வைத்தியசாலை அமைக்க நான்கு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பளை ஆஸ்பத்திரியில் 'அம்புலன்ஸ்' கராஜ் அமைக்கவும், சாரதி கடமை நேரத்தில் தங்குவதற்குவசதியாக அறை அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் அளவெட்டி மத்திய மருந்தகம், உடுவில் மத்திய மருந்தகம் ஆகியவற்றுக்கு நிரந்தரமான கட்டடங்களை அமைக்கத் தலா பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அச்சுவேலி ஆஸ்பத்திரியின் பதிவு மருத்துவ வைத்தியரின் வதிவிடம் அமைக்க நான்கு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளின் திருத்த வேலை, பராமரிப்பு வேலைகளுக்குப் பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது'' என்றார். (153)

மோட்டார்சைக்கிள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பி நாயகம் (வயது 50) என்பவர் படுகாயமடைந்தார்,

வசாவிளானில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் மந்துவிலைச் சேர்ந்த சவரிமுத்து நியூட்டன் [24 வயது] என்பவர் படுகாயமடைந்தார். இச்சம்பவத்தில் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

உரும்பராயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தொன்றில் கோண்டாவிலைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் இளங்கோ (வயது-21) என்பவரும், சைக்கிளில் சென்றவரான உரும்பராயைச் சேர்ந்த என். திருநாவுக்கரசு [வயது 25] என்பவரும் படுகாயமடைந்தனர்.

பண்டத்தரிப்பில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள்-லாண்ட்மாஸ்ரர் விபத்து ஒன்றில் தெமட்டகொடயைச் சேர்ந்த பிறடி சில்வா மக்ஸி சில்வா [வயது 42] என்பவர் படுகாயமடைந்தார். இவ் விபத்தில் லாண்ட்மாஸ்ரரை செலுத்தி வந்தவரும் காயம் அடைந்துள்ளார். [56]

மரண அறிவித்தல்

திருமதி வேலுப்பிள்ளை - சுந்தரம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைச் சேர்ந்த தற்பொழுது சாவகச்சேரியில் வசிக்கும் திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம் 08-05-90ல் காலமானார். அன்னார் மு. க. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேந்திரன் (செந்தில் அச்சகம் - சாவகச்சேரி), மனோன்மணி (விவசாயப் போதனாசிரியை), தவமணி (ஆசிரியை-றம்புக்கணை), பராசக்தி (தாதி - கொழும்பு ஆஸ்பத்திரி), மகாதேவன் (சட்டத்தரணி - குரும்பசிட்டி), சிவசக்தி, செல்லம்மா (சுவிஸ்), பரமேஸ்வரி (மிருக வைத்தியக் கந்தோர் - சாவகச்சேரி), மனோகரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (உரிமையாளர்: கே. வி. எம். றெகோடிங் ஸ்ரூடியோ - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகை, ரெறன்ஸ் (பாதுகாப்பு மேற்பார்வையாளர் - கொழும்பு), பவானி (ஆசிரியை - குரும்பசிட்டி), பத்மநாதன் (முகாமையாளர்: கே. வி. எம். றெக்கோடிங் ஸ்ரூடியோ), வசந்தகுமார் (சுவிஸ்), செகராசா (லிகிதர் - ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை - கொழும்பு), வதனி (சுவிஸ்), தவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (10-05-90) வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு அன்னாரின் சாவகச்சேரி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

2-வது கற்குழி ஒழுங்கை,
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
மு. க. வேலுப்பிள்ளை

(சி-3678)

இப்பத்திரிகை 'சுழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு
பின்போடப்பட்டுள்ளது

ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான முன்றலில் நேற்று மாலை 5-30 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த சீட்டிழுப்பு, இயந்திரக் கோளாறு காரணமாக மறுஅறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை யாழ். மக்கள் கழகத்தினர் அறியத்தருகின்றார்கள்.

காரியாலயம்
யூரெப் சைனு ஹோட்டல்
89, இரண்டாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-3676)